1994 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 402, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு உணவு அமைச்சர்.

402—

வலங்கைமான் தொகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல்

**22657—திருமதி கே. பஞ்சவர்ணம்:*

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் தொகுதி, கொட்டையூரில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வலங்கைமான் தொகுதி கொட்டையூர் கிராமத்தில் அரசு நேரடிக் கொள்முதல் நிலையம் 1975-லிருந்து வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. நேரடிக் கொள்முதல் நிலையத்திற்காக சொந்தக் கட்டிடம் கட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று எண்ணி, இன, கட்சி வேறுபாடு இன்றி, எண்ணிலடங்கா எண்ணற்ற திட்டங்களை உருவாக்கி செயல் ஆக்கம் தந்து கொண்டிருக்கும் ஏழைகளின் இதய தெய்வம், எங்கள் குடும்பத்தின் குல தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான ஆட்சியில் அந்தப் பகுதி விவசாயத்தை மையமாக வைத்திருக்கிறது என்பதை அறிவீர்கள். அந்தப் பகுதியில் தொடர்ந்து வாடகைக் கட்டிடத்தில் இருக்கிற காரணத்தால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் மற்றும் நெல் கொள்முதல் செய்வதில் சிரமமும் இருக்கிற காரணத்தால் புதிதாகக் கட்டிடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மிக்க நன்றி. அது எப்போது நடைமுறைக்கு வரும்? எந்த இடத்தில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1994 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டையூர் கிராமத்தில் நம்முடைய நேரடிக் கொள்முதல் நிலையம் சொந்தக் கட்டிடத்தில் இயங்குவதற்காக 1992-93 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முயற்சிகளை எடுத்துக் கொண்டது. அதற்கு முதலில் சர்வே எண் 76/1-ல் 30 சென்ட் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இந்த இடம் 50 கூட்டு நபர்களுக்குச் சொந்தமான சமுதாய பட்டா நிலம் என்பதால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு இன்னொரு தனியாருக்குச் சொந்தமான ஒரு நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக பேசப்பட்டது. அந்த நிலத்தின் உரிமைதாரர் சதுர அடிக்கு 5 ரூபாய் கேட்டுக்கொண்டிருக்கிறார். 30 சென்ட் நிலம் வேண்டும். அது சுமார் 65,340 ரூபாய் கிரயம் ஆகிறது. ஆனால் அரசாங்கம் சதுர அடி ரூபாய் 2.85 என்ற அளவுக்குத்தான் வாங்கலாம் என்று நிர்ணயித்திருக்கிறது. அந்த அளவுக்கு அந்த விலைக்கு தஞ்சை மாவட்டத்தில் அல்லது காயிதே மில்லத் மாவட்டத்தில் நிலம் கிடைப்பது அரிது. ஆகவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாவட்ட வருவாய்த் துறை அலுவலரோடு கலந்து பேசி இந்த இடத்தைக் கையகப்படுத்துவதற்காகப் பேசிக் கொண்டு வருகிறார்கள். விரைவில் இதுசம்பந்தமாக இறுதி முடிவு எடுத்து அங்கே சொந்தமான கட்டிடம் கட்டி முடிக்கப்படும்.

திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இந்த இடத்தைக் கையகப்படுத்தி நல்ல ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கக்கூடிய இந்தத் துறைக்கு நன்றி தெரிவித்து இந்த ஆண்டிலேயே அதைக் கட்டி முடிக்க ஆவன செய்ய வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டு முடிக்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டையூர் கிராமம் என்பது, நெல் கொள்முதலுக்கு ஒரு முக்கியமான கிராமமாக இருந்து வருகிறது. ஆகவே, இந்த ஆண்டிலேயே அந்த இடத்தைப் பேசி முடிவு செய்து, சொந்தக் கட்டிடத்திலேயே இயங்குவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசாராமன்.

1994 ஏப்ரல் 27]

திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நேரடிக் கொள்முதல் நிலையங்களைச் சென்ற ஆண்டு அதிகமாகத் திறந்திருந்தும் கொள்முதல் சரியாகச் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா? தஞ்சை மாவட்டம் விவசாயிகளை நம்பி வாழுகின்ற மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த ஆண்டாவது, நேரடிக் கொள்முதல் நிலையங்களை அரசு திறக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, கொட்டையூர் என்கிற கிராமத்திலே சொந்தமாக நேரடிக் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டிடம் கட்டப்படுமா என்ற கேள்வி. அதற்குப் பதில் அளித்து இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள் அதிகமாகக் கொள்முதல் நிலையங்களைத் திறக்க அரசு முன் வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதிகமாகத்தான் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று மாத்திரம் பதில் சொல்லி, அவர்களுக்கு மேலும் விவரம் வேண்டுமானால் தனியாக வேறு கேள்வி போடவேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 403, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

403—

குலசேகரம், அருமனை மருத்துவமனைகளில் இரவிலும் சிகிச்சை அளிக்க மருத்துவ அதிகாரி நியமனம்

**20248—திரு. இரா. அப்பு நடேசன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, குலசேகரம், அருமனை அரசு மருத்துவமனைகளில் இரவு நேரங்களில் சிகிச்சை அளிக்க நிலைய மருத்துவ அதிகாரியை அரசு நியமிக்குமா?

(ஆ) ஆம் எனில், நிலைய மருத்துவர்கள் எப்பொழுது நியமிக்கப்படுவர்?

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,